**செய்தி வெளியீடு எண்: 746** **நாள்: 16.10.2018**

# செய்தி வெளியீடு

இன்று (16.10.2018) சென்னை கோபாலபுரம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோகத் திட்டக் கிடங்கில் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் **திரு. இரா. காமராஜ்** அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் மாத ஒதுக்கீட்டின்படி நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது. அனைத்து பொருள்களும் உரிய தரத்துடன், சரியான எடையில் இயக்க பொறுப்பாளர்கள் முன்னிலையில் நகர்வு செய்யப்பட வேண்டுமென கிடங்கு அலுவலர்களை அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, அங்காடிகளுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், முன்நகர்வு செய்யப்பட்டு நவம்பர் முதல் தேதியிலிருந்து குடும்ப அட்டைதாரர்கள் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக, கையிருப்பு வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார். அமுதம் நியாய விலை அங்காடிகளை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான எடையில் பொருள்கள் வழங்கப்படுவதை ஆய்வின்போது உறுதி செய்தார்.

கோபாலபுரம் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடியில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், பொது மக்களுக்கு தரமான அரிசி, அனைத்து மளிகைப் பொருள்கள், மற்றுமுள்ள அத்தியாவசியப் பொருள்கள் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

பருவ மழை காலங்களில் கிடங்குகள் மற்றும் நியாய விலை அங்காடிகளில் அத்தியாவசியப் பொருள்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்பட வேண்டுமென்றும், தாழ்வான பகுதிகளில் மழைநீர் புகாமல் தடுப்பு நடவடிக்கைகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

ஆய்வின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி. எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திருமதி. சோ. மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**